ExNoRa NIRMAL

TOTAL REVERSAL

From Mr. Blank to Answer Bank

TOTAL REVERSAL

A model of
JEEEVAN SHASTRA,
the Science of Living
for Being Human Being

SET-ASIDE "SUICIDE" *
&
SUICIDE "SET-ASIDE"

Mr. Blank
to
Answers Bank

* "SET-ASIDE" meaning here: discard or reject something

SET-ASIDE "SUICIDE"
&
SUICIDE "SET-ASIDE"

TOTAL REVERSAL

Blank

to

Answers Bank

தமிழ்வாணனின் தன்னிகரில்லா பதில்கள்

As Editor of Kadambari, Nirmal's answered the readers' QUESTIONS which became super-hit and that made Kadambari increase its circulation

வேண்டுமென்றார். 'எப்படி' என்று கேட்கிறார் நாடகாசிரியர். 'வில்வன் இன்னொரு வில்வனை கத்தியால் குத்துகிறான் அல்லவா? கத்தியால் குத்துவதற்குப் பதில் தும்பாக்கியால் சுடுவது போல் காட்சியை மாற்றி அமையுங்கள்! தூங்கிக் கொண்டிருப்பவர்கள் துப்

மரத்தில் குருத்து வளர்ந்து விடும். வாழை வெட்ட வெட்ட பக்கத்தில் சிறு கன்றுகள் முளைக்கும். அதனால்தான் வாழையடி வாழை என்று சொல்லுகிறார்கள். அது போல திருமணமான தம்பதிகள் குழந்தை குட்டிகளுடன் பெருக வேண்டுமென்றுதான் வாழையைக்

நிர்மல் பதில்கள்

நிர்மல் பதில்கள்

பி.குமார், சேலம் 6.

பெண் இல்லாமல் ஆணும், ஆண் இல்லாமல் பெண்ணும் வாழ முடியுமா?

முடியும்... (கூறுபவர் ஒரு குடும்பக் கட்டுபாடு அதிகாரி)

குமரவேல், அகரம்.

எப்படிப்பட்ட நண்பர்களை பெற வேண்டும்?

நண்பர்களைத் தேடிக் கொள்ளு முன் பிரபல ஆங்கில பழமொழியை நினைவுக் கொள்ளுங்கள். ''உன் நண்பர்கள் யார் என்பதை கூறு. நீ யார் என்பதை நான் கூறுகிறேன்.''

பா.குமரேசன், கோவூர் ★

எனக்கு வயது ஐம்பது. சொந்த வீடு கட்டவில்லை. இன்னும் குடித்தனக்காரனாகவே இருக்கின்றேனே?

இந்த உலகில் வாழும் அத்தனை மனிதர்களும் குடித்தனக்காரர்கள் தான் ஒரு நாள் வீட்டை காலி செய்து போக வேண்டியவர்கள்தான்.

பி.எல்.பரமசிவம், மதுரை - 1

சாதனை எப்போது சிறந்த சாதனையாவது?

உங்கள் சாதனையின் பலன் உங்களை மட்டுமின்றி மற்றவர்களையும் சென்று அடையும்போது.

வே. செந்தில்குமார், கொங்கணாபுரம்.

மனைவியை அடக்கும் கணவன், மனைவிக்கு அடங்கிய கணவன் யார் புத்திசாலி?

மனைவி எப்படிப்பட்டவள் என்பதைப் பொருத்தது அது. அடங்காப் பிடாரி மனைவியை அடக்கும் கணவன், தன்னைவிட அறிவில் சிறந்த மனைவிக்கு அடங்கிப் போகும் கணவன் இருவருமே புத்திசாலிகள்தான்.

பாமாராஜன், மாயவரம்.

தோல்வியைத் தழுவபவன் யார்?

கிடைத்த சந்தர்ப்பங்களை உணராதவன்.

வெற்றியைத் தழுவபவன் யார்?

கிடைத்த சந்தர்ப்பங்களை பயன்படுத்திக் கொள்பவன்.

மகத்தான வெற்றியை அடைபவன் யார்?

புதிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்பவன்.

மைனர் முருகன், எடப்பாடி.

நண்பர்கள் இல்லாமல் வாழ முடியுமா?

நண்பர்கள் இல்லாத வாழ்க்கை கடினமான தொன்றல்ல. ஆனால், வாழ்க்கையின் கடினமான நாட்களில் நண்பர்கள் இல்லாத வாழ்க்கையை விட கொடியது வேறொன்றுமில்லை.

போர்ணாம்பட் எம். ரஃபி, சென்னை-7.

ஹிந்தி நடிகை ஷபனா ஆஸ்மியின் பொது சேவைப்பற்றி?

வரவேற்கப்பட வேண்டியது தான். அது பின்னால் அரசியல் மூலம் செய்துக் கொள்ளப் போகும் சுயசேவைக்கான இன்று போடப்படும் அஸ்திவாரமாக இல்லாத அளவில்.

கொங்கணாபுரம் மோஸ்ஜே.

அரசியலில் இன்று இளைஞர்கள் அதிகம் ஈடுபடக் காரணம் என்னங்க?

வேலை வாய்ப்போ, சுயவேலை சந்தர்ப்பங்களோ கிடைக்காத நாளில் வேறு எதில் ஐயா அவர்கள் சுலபமாக ஈடுபட முடியும்?

வி.எஸ். ஸ்ரீதரன், சென்னை 83.

நேரங் கழித்து வருபவர்கள் ஏன் நேரத்தின் அருமையை இன்னும் உணரவில்லை?

அவர்கள் மட்டுமல்ல. வரவேண்டிய நேரத்திற்கு மிக முன்னதாகவே வருபவர்களும் நேரத்தின் அருமையை உணர்ந்தவர்கள் அல்லர்.

சி. நடராஜமணி, சேலம்-7.

மனைவி எப்படி அமைந்தால் வாழ்க்கை நன்றாக இருக்கும்?

பிரம்பை கையில் எடுக்காத டிச்சராக, லாபத்தில் பங்கு கேட்காத பார்ட்னராக, தோள் கொடுக்கும் படை சோல்ஜராக, உடன் உரிமை குரல் எழுப்பும் மென்மையான காம்ரேடாக இருக்க வேண்டும்.

ரமாமணி திருவல்லிக்கேணி.

பிக்பாக்கெட்டை கையும் களவுமாக பிடித்த அனுபவம் உண்டா?

பிக்பாக்கெட்டை பார்த்து பயந்தது உண்டு. இதோ அந்த நிகழ்ச்சி பிக்பாக்கெட்டின் கை ஷர்ட் பாக்கெட் அருகே போகிறது. பர்ஸை எடுக்கிறது. பணத்தை எண்ணுகிறது. 'விடாதே பிடி' என்று தைரியமாக குரல் கொடுத்து வீரமாக பிடிக்க எண்ணியவன் சந்தடி செய்யாமல் பின் வாங்குகிறேன். கோட் ஸ்டாண்டில் இருக்கும் என் சட்டையிலிருந்து பிக்பாக்கெட் செய்துக் கொண்டிருந்தது என் மனைவி.

சுரேஷ் நாயுடு, இந்திரா நகர், சென்னை.

தென் ஆப்ரிக்க கிரிக்கெட் அணியினர் எப்படி?

சில வீரர்கள் பெயர் வருமாறு. வெஸல்ஸ், ரைஸ், குக். அவர்களின் பெயர்களின் தமிழாக்கம் முறையே பாத்திரங்கள், அரிசி, சமையல்காரர். எல்லாம் சிருக்கின்றன. விருந்தினர் தான் இன்னும் காணோம்.

பா. உதயகண்ணன், பெரம்பூர்.

சினிமா சண்டை, அரசியல் சண்டை ஒப்பிடுக:

டைரக்டர் 'கட்' என்றவுடனே சினிமா சண்டை நிற்கும். அரசியலில் பெருந்தலைவர் 'கட்' என்றவுடன் ஒரு அரசியல்வாதி கட்சியைவிட்டு நீக்கப்படுவார். பிறகுதான் சண்டை ஆரம்பாகும்.

டி.கணேஷ்ராஜ், பாண்டிச்சேரி - 13.

தங்கள் பார்வையில் யாரை உயர்ந்த மனிதராக நினைக்கிறீர்கள்?

ஐந்தடி உயரமே கொண்டு ஐம்பது கோடி மக்களை ஆண்ட மறைந்த பாரதப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி அவர்களை உயரத்திற்கும் உயர்விற்கும் உறவில்லை என்ற உண்மையை உலகிற்கு உணர்த்திய உறுதி உள்ளத்திற்கு உரிமையாளராக இருந்த உத்தமர்.

ஆர். கோவிந்த கிருஷ்ணன், ராசிபுரம்.

கல்வி வாசனையற்ற பெண்கள் வாசமில்லாத மலர்கள்தானே?

பெண்ணைத் தாழ்த்துவது அவள் அடையாத கல்வியல்ல. அவள் அடைந்த காசு பணந்தான்.

என். சுரேஷ், சேலம்-5.

நம்முடைய பலமே நமக்கு பலவீனமானது எப்போது?

நம்முடைய பலம் நமக்கு அகம் பாவத்தை ஏற்படுத்தும்போது.

தீபாவளிச் சிறப்பிதழில் 'வாழ்விங் மிஷினால் வந்த விபரீதம்' நகைச்சுவைக் கதையை எழுதியவர் கதையிலிருந்து 'வாஷ்' செய்யப்பட்டு இருந்தது. அக்கதையை எழுதியவர் ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த திருமதி மைதிலி சேஷாத்திரியாவார்.

ஆ.ர்.

நிர்மல் பதில்கள்

பா.குமரேசன், கோவூர்.

பொம்பளை சிரிச்சா போச்சு! உங்கள் விளக்கம்?

ஒரு ஆட்டோ பின்னால் எழுதப் பட்டிருக்கும் வாசகம். ''சீறும் பாம்பை நம்பு, சிரிக்கும் பெண்ணை நம்பாதே'' இந்த அப்பாவி ஆண்கள் ஒரு பெண் சிரித்தவுடன் அவள் தன்னைக் காதலிப்பதாக நினைத்து ஒரு மாதிரி ஆகிவிடுகிறார்கள். பெண் சிரித்தால் ஆயிரக்கணக்கான இதயங்கள் காணாமல் போய்விடும்.

திருவேங்கடம், சோழவந்தான்.

அளவாக மது அருந்தினால் தவறா?

கொஞ்சம் மது உள்ளே போனவுடன் அளவாவது மண்ணாவது. முதல் கோப்பை மதுவை மனிதன் ஆட் கொள்கிறான். இரண்டாவது கோப்பை உள்ளே முன்பு சென்ற மது புதிதாக வரும் மதுவை ஆட்கொள்கிறது. மூன்றாவது கோப்பை மனிதனை ஆட்கொள்கிறது.

தா.மாசிலாமணி, சூளைமேடு.

யார் திருடன்?

தங்கத்தைத் திருடுபவன் திருடன். நிலத்தைத் திருடுபவன் அரசன்.

ஆர்.சண்முகசுந்தரம், பட்டாபிராம்.

மயிலின் சாயலுள்ள அழகான பெண்ணை மனைவியாகப் பெறுவது எப்படி?

மயிலைப் போன்ற அழகான பெண்ணா! மற்ற பறவைகள் கூறுவது உங்கள் காதில் விழவில்லையா? ''மயிலுக்கும் அழகுக்கும் என்ன சம்பந்தம். அதன் கால்களைப் பாருங்கள் - கன்றாவி. அதன் குரலைக் கேட்டீர்களா? கர்ண கடூரம்!

சி.சித்தேரிமுத்து, சென்னை -24.

நம்மால் பலன் அடைந்து பிறகு நமக்கு பலன் அளிக்காமல் நம்மையே ஏய்ப்பவர்களைப் பற்றி...?

அனுபவம் என்ற பலனை அவர்கள் அளித்து விடுகிறார்களே!

டி.கமல்குமார், ஈரோடு.

சோதனைகளே சாதனைகளாவது எப்போது?

பெற்ற அனுபவத்துடன் மூளையை சற்று அதிகம் பயன் படுத்தி, உள்ள உறுதியுடன் மீண்டும் முயற்சிக்கும் போது.

பா.பசுபதி, மானாம்பதி

வறுமையில்லா வாழ்க்கை எதைப் போன்றது?

மிக ஆபத்தானது. ஒரு சோதனை வரும் போது அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தியில்லாதவன் வறுமையில் உழல்பவன் அல்ல. வறுமையையே அறியாதவன்.

கே.ராஜபாலு, சேலம் - 1.

எதற்கெடுத்தாலும் சந்தேகப்படுபவர்களை எப்படிக் கையாளுவது?

தவறான சந்தேகத்திற்குக் காரணம் அறியாமை தான். அவர்களின் அறியாமையை போக்குங்கள். இரண்டாவது சந்தேகப்படுபவர்களை நம்புங்கள். உங்கள் ''நம்பும்'' குணம் அவர்களைத் தொற்றிக் கொள்ளும்.

எல்.மனோகரன், சங்கமங்கலம்.

புனித நட்புக்கு மூன்று இலக்கணம்?

அது மகிழ்ச்சியை அதிகரிக்க வழி செய்யும். துயரத்தைக் குறைக்க துணை புரியும். சமநிலை சரியாமல் பார்த்துக் கொள்ளும்.

வண்ணை கணேசன், சென்னை-11

ஆசைக்கு முற்றுபுள்ளி வைத்தவர்களைக் கண்டதுண்டா?

இல்லை. சன்னியாசிகள் கூட சன்னியாசத்திற்கு ஆசைப்பட்டவர்கள் தானே!

நாடோடி வீராங்கன், சென்னை-24.

வெற்றிக்கு வழி என்ன?

''விடா முயற்சியை உற்ற நண்பர்களை நினையுங்கள். அனுபவத்தை ஆசிரியராக ஏற்றுக் கொள்ளுங்கள். எச்சரிக்கையை உடன் பிறந்த அண்ணானாகக் கருதுங்கள். நம்பிக்கையை பாதுகாவலனாக பாவியுங்கள். வெற்றிக்கான வழியைக் கூறிய வர் ஜேம்ஸ் அடிசன்.

எம்.முத்துகுமரன், அந்தணப்பேட்டை.

ஒரு லேட்ஸ்ட் அரசியல் அறுவை ஜோக் பிளீஸ்!

ஒரு அமைச்சர் அயல்நாடுகள் செல்கிறார். அங்கு வாகனங்கள் சாலைகளின் வலது பக்கமே போவதைப் பார்த்து ஊர் திரும்பியவுடன் தனது செயலாளரை அழைத்து ''நம் ஊரிலும் சாலையில் வண்டிகள் இடது பக்கத்திற்கு பதிலாக உடனடியாக வலது பக்கம் போக வேண்டும்'' என்று உத்தரவு போடுங்கள் என்கிறார் செயலாளர் தயங்குகிறார். ''ஐந்து லட்சம் வண்டிகள் நமது நகரத்தில் ஓடுகின்றனவே. ஒரேயடியாக எப்படி நடைமுறையை மாற்றுவது?'' என்று கேட்கிறார். மந்திரி கூறுகிறார். ''நீங்கள் கூறுவதில் நியாயம் இருக்கிறது. எல்லா வண்டிகளும் வழக்கம் போல் இடது பக்கமே போகட்டும். நாளையிலிருந்து ஸ்கூட்டர்களும், அடுத்த வாரத்திலிருந்து லாரிகளும், அதற்கு அடுத்த வாரத்தில் பஸ்களும், படிப்படியாக இடது பக்கத்திலிருந்து வலது பக்கத்திற்கு மாறி ஓட்டிச் செல்ல வேண்டும் என்று உத்தரவிடுங்கள்.

எம்.சிவகுமார், கொங்கணாபுரம்.

அன்னை தெரசா பற்றி உங்கள் கருத்து?

கடவுளின் மறு அவதாரம் சில ஏழைகள் அவரை ஏமாற்றுகிறார்கள் என்பதை அன்னையிடம் ஒருவர் சுட்டிக் காட்டிய போது அன்னை கூறினார். ''மற்றவர்கள் அனைவரும் பணக்காரர்களிடம் ஏமாற்றும் போது, ஏழைகளிடம் ஏமாற்றுவதுக்கென்று நான் ஒருவர் இருந்து விட்டு போகிறேன்''

'இளவல்' ஹரிஹரன், மதுரை-14

வேலைக்குப் போகும் பெண்கள் தன்னம்பிக்கை கொண்டவர்கள் என்ற கருத்துக்கு மாறாய் திமிர் பிடித்தவர்கள் என்று சொல்லப்படுவது குறித்து?

அது வேண்டுமென்று அல்ல 10-ல் இருந்து 5 வரை தங்கள் மீது பதியும் ஒரு தினுசான பார்வையிலிருந்து தப்பிப்பதற்கான கேடயம்தான் 'திமிர்'.

—வி.எஸ். ஸ்ரீதரன், சென்னை-83

கண்ணதாசன் பாடல்களில் தாங்கள் ரசித்த ஒன்றைப் பற்றிக் கூறுங்களேன்!

''நதியில் விளையாடி கொடியில் தலைசீவி நடந்த இளந்தென்றலே'' என்ற பாசமலர் பட பாடல் அடுக்கது ''ஒரு கோப்பையில் என் குடியிருப்பு. ஒரு கோலமயில் என் துணை இருப்பு'' என்ற பாடல் மது மங்கையை நினைத்து கவிஞர் எழுதவில்லை. கோப்பை என்று அவர் குறிப்பிட்டது மைகூடை. கோலமயில் என்றது எழுதும் மயில் சிறகை.

நிர்மல் பதில்கள்

தில்லைவில்லாளன், கோடம்பாக்கம்.

சினிமா நடிகைகளில் யார் மூக்கு அழகாக இருக்கிறது?

இப்படி கேள்வி கேட்பதை விட்டு விட்டு உங்கள் மூக்கு எப்படியிருக்கிறது என்று பாருங்கள். மூக்கு அழகாக இல்லா விட்டாலும் தலைவாரிக் கொள்ளும் விதம், உடை அணிந்து கொள்ளும் விதம், மேக்அப் செய்து கொள்ளும் விதம், இவற்றால் மூக்கு நன்றாக இல்லாததை ஒரு சாதாரண விஷயமாக ஆக்கிவிடலாம். அப்படி மூக்கு முகத்திற்குப் பொருந்தாமல் காட்சியளித்தால் ஒரு பிளாஸ்டிக் சர்ஜனிடம் சென்று நமக்கு வேண்டிய மாதிரி மூக்கை மாற்றி அமைத்து விடலாம்.

லலிதகுமாரி, ராயபுரம்

இரவில் தூங்கும்போது நீங்கள் இறப்பதாகக் கனவு காண்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். அப்போது என்ன செய்வீர்கள்?

பகலில் விழித்துக் கொண்டதும் அடடா நேற்றிரவு கண்டது கனவுதானா என்று வருத்தப்படுவேன்.

லக்ஷ்மி, பெரம்பூர்.

திரைப்படம் பார்ப்பதில் மனைவி அதிக நாட்டமுள்ளவாக இருந்தால் திருத்துவது எப்படி?

திருந்த வேண்டியது மனைவியல்ல. ஊரோடு ஒத்துப் போகத் தெரியாத நீங்கள்தான்.

ஜி.சாந்தி, மதுரை

காதலுக்காக வாழ்வது நல்லதா? உயிர் விடுவது நல்லதா?

உங்கள் காதல் இருதலைபட்சமாக இருந்தால் வாழ்தல் நல்லது. ஒருதலைபட்சமாக இருந்தால்....! நான் சொல்ல வேண்டுமா?

வசந்தா, மதுரை

குழந்தைகளும் புரிந்து கொள்ளக் கூடிய மொழி எது என்று உங்களுக்குத் தெரியுமா?

மனித இனத்தில் மொழிவெறி இல்லாதவர்கள் குழந்தைகளே! அது சீனக்குழந்தையாக இருந்தாலும் சரி, தமிழ் குழந்தையாக இருந்தாலும் சரி, இந்தி குழந்தையாக இருந்தாலும் சரி அவர்களுக்கெல்லாம் ஒரேமொழிதான்!

வேதம், திருவாரூர்.

சினிமாவில் கனவுக் காட்சிகளே இல்லாவிட்டால்?

சொர்க்கலோக செட்டிங்ஸ் இருக்காது. பின்னணி இசை கேட்காது.

நீயட்டுக்கு வேலையில்லாமல் போய்விடும். கதைப்படி ஏழையான கதாநாயகனை ராஜா உடையில் பார்க்கும் வாய்ப்பு கிடைக்காது.

சம்பத், அயன்புரம்

குடும்பப் பெண்களுக்கும் நடிகைகளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

குடும்பப் பாங்கான வேடத்தில் நடிக்கும் நடிகைக்கும் நடிகை போல் வேடமணிந்து திரியும் குடும்பப்பெண்களுக்கும் உள்ள வித்தியாசம்தான்.

டி.பூர்ணசந்திரன், காசிமேடு

எவை உண்மையான கண்கள்?

நீங்கள் பார்க்கத் தினறுகிறீர்களே அந்தக் கண்கள்.

பி.எஸ்.ஆனந்தன், திருக்காட்டுப்பள்ளி.

இன்றைய பிரபல கதாநாயகர்களில் சண்டைக்காட்சிகளில் நன்றாக நடிக்கக் கூடியவர்கள் யார்?

இவர்களில் எவருடைய டூப் சண்டை உங்களுக்குப் பிடிக்கும் என்று கேள்வியை மாற்றிக் கேளுங்கள்.

பி.சரசுவதி, திருவல்லிக்கேணி.

அன்றைக்கு இன்று சினிமா துறை நன்றாக செயல்படுகிறதா?

இருபது வருடங்களுக்கு முன்னால் பேசிக் கொண்டோம்: ''அடடா... இருபது வருடங்களுக்கு முன் படங்கள் என்னமாய் இருந்தன? ஹூம்...இன்று இப்படி இருக்கின்றனவே'' என்று. இன்று உங்கள் கேள்வியை படித்தவுடன் நாங்கள் பேசிக் கொண்டது: ''அடடா... இருபது வருடங்களுக்கு முன் படங்கள் என்னமாய் இருந்தன:... ஹூம்.... இன்று இப்படி இருக்கின்றனவே!'' என்று.

ஆ.சௌதா, திருச்சி.

நடிகைகள் நடிகர்களைப் போல் ஏன் மக்களுக்கு உதவி செய்வதில்லை?

நடிகைகள் செய்ய நினைக்கும் உதவி அவர்கள். அம்மாக்களைத் தாண்டிப் போக வேண்டுமே!

ஆர்.லதா, கோவை.

சினிமா தியேட்டருக்குள் பிஸ்கெட், முறுக்கு முதலியவைகளை ஏன் விற்பனை செய்கிறார்கள்?

படத்தைப் பார்க்கும் ரசிகர்களால் படத்தை டைரக்ட் செய்தவரை கடித்து மெல்ல முடியாதல்லவா!

ஆர்.சசி, மயிலாடுதுறை.

காமிராவுக்கு என்ன தமிழ்ச் சொல்? புகைப்படக்கருவி என்பதைத் தவிர வேறு சொல் இல்லையா?

ஏன் இல்லை. 'உருக்கவர் பெட்டி' என்ற அழகான தமிழ்ச் சொல் இருக்கிறதே!

மனிதனாக வாழத் தேவைப்படுவது எது?

இயந்திரத்தனமில்லாத இதயம்.

எல்லா மதத்தினருமே ஒரே கடவுளை ஒரேவழியில் வழிப்பட்டால் என்ன?

அரசியல்வாதிகளின் பிழைப்பில் மண்ணைப் போடுகிறீர்களே!

கே.வசந்தா, உடுமலைப்பேட்டை

உலக பயணக் கட்டுரைகளை முதலில் பிரபலப்படுத்தியது 'இதயம்' மணியன்தானே?

இல்லை! பயணக்கட்டுரைகளைப் பாப்புலராக்கியவர் ஏ.கே.செட்டியார் அவர்கள். 35 வருடங்களுக்கு முன்பு ஆனந்தவிகடனில் 'அமெரிக்கா அழைக்கிறது' என்ற அற்புத பயணக் கட்டுரையை எழுதிய பள்ளித் தலைமை ஆசிரியை காந்திமதி பயணக்கட்டுரைகள் எழுதுவதில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியவர். ஆனால் பயணக்கட்டுரை என்றால் மணியன், மணியன் என்றால் பயணக் கட்டுரை என்று தன் பயணங்களை இலக்கியமாக்கிய பெருமை மணியனையே சாரும்.

எஸ்.வி.சம்பத்குமார், செங்கல்பட்டு

பத்திரிகை ஆசிரியர்களில் கேள்வி பதில் எழுதுவதில் சிறந்தவர் யார்?

வாசகர்களின் கேள்விகளுக்கு சிறப்பாக பதிலளிக்கும் பத்திரிகை ஆசிரியர் யார் என்று கேளுங்கள். இருபது ஆண்டுகளுக்கு முன்பு வாசகர் கேள்விகளுக்கு பதில் அளிப்பதில் வடநாட்டில் ஒருவரும் நம்மூரில் ஒருவரும் கொடி கட்டிப் பறந்தார்கள். அங்கே பாபுராவ் பட்டேல் இங்கே காலஞ்சென்ற தமிழ்வாணன். அப்பாவிற்கு தப்பாமல் வாரிசாக வந்துள்ளார் லேனா தமிழ்வாணன். மெல்லிய நகைச்சுவை இழையோடும் அர்த்தம் தொனிக்க பதில் அளிப்பதில் சமர்த்தர் சாவி. அரசு பதில்கள் மிக நன்றாக இருக்கின்றன. ஆனால் மூன்று பேர் சேர்ந்து சமைக்கும் அவியலாமே அது.



ஏ.ராஜசேகரன், வத்தலகுண்டு

கடவுள் ஏன் மனிதனைப் படைத்தார்?

மிருகங்களுடன் ஒப்பிட!

மாதவன், கோவை-2

தமிழ் எழுத்தாளர்கள் வசதியாக இருக்கிறார்களா?

இல்லை. ஆனால் எழுதுவதற்கான வசதியைப் பெற்றிருக்கிறார்கள்.

எல்.மீனாட்சி, சேலம்.

கடவுளுக்கும் நீதிபதிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

நீதிபதியின் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யலாம்.

கே.கண்ணன், மதுரை.

ஜெயகாந்தனைப் பற்றி தங்கள் அபிப்பிராயம்?

ஜெயகாந்தனைப் பற்றியா கேட்கிறீர்கள்! அதைவிட அவருடைய எழுத்தைப் பற்றிக் கூறுகிறேனே. இந்த நூற்றாண்டின் ஒப்புயர்வற்ற எழுத்தாளர் அவர்.

வசீகரன், திருச்சி

உங்களுக்கு ஒரு கோடி ரூபாய் அன்பளிப்பாக கொடுத்தால் முதலில் நீங்கள் என்ன செய்வீர்கள்?

'சரியாக இருக்கிறதா என்று எண்ணிப் பார்ப்பேன் என்பது பழைய ஜோக்... உடனடியாக ஒரேநாளில் செலவு செய்து விடுவேன். ஏனென்றால் ரூபாயின் மதிப்புதான் வினாடிக்கு வினாடி விழுந்து கொண்டே இருக்கிறதே!

'ஜே', கா.புதூர்

ஆண்களுக்கு மீசை அவசியமா?

அந்த மீசையைப் பார்த்து ஏக்கப் பெருமூச்சுடன் பார்க்கும் கண்கள் இருக்கும் வரை இந்தக் கேள்வி எழ வேண்டிய அவசியமாகிறது.

இப்பொழுது நம்நாடு இருக்கும் நிலையில் இன்னொரு மகாத்மா தோன்றினால் மக்களை சீர்திருத்த முடியுமா?

சம்திங்' கொடுத்து மக்கள் அவரை ஒரு வழி பண்ணிவிடுவார்கள்.

வி.சிங்காரவேலு, தூத்துக்குடி.

எப்பொழுது ஒருவனை நாடு விரும்பும்?

அவன் நாட்டை விரும்பும்போது!

மனிதன் ஏன் பணத்திற்கு அடிமையாகிறான்?

பணத்தை அடிமைப்படுத்த நினைப்பதால்.

எஸ்.சுமதி, சீர்காழி.

கேளுங்கள் கொடுக்கப்படும். தட்டுங்கள் திறக்கப்படும் என்பதற்கு என்ன வித்தியாசம்?

இரண்டும் ஒன்றேதான். மனிதர்கள் உதவும் மனப்பான்மையுடன் இருக்க வேண்டும் என்பதை எவ்வளவு அழகாக கூறப்பட்டிருக்கிறது.

எம்.ஆனந்தன், மணப்பாறை

வர்ணங்களில் சிறந்தது எது ?

சிவப்புத்தான். உழைப்பவர்களின் வர்ணமாயிருந்தும் இந்த சிவப்பு வர்ணத்திற்குத்தான் எத்தனை சக்தி! மணிக்கு நூறு மைல் வேகத்தில் ஓடும் ரெயில் வண்டி சிவப்பு வர்ணத்தைப் பார்த்தும் உடனே நின்று விடுகிறது. ஆனால் இந்த சிவப்பு விளக்கு பச்சை விளக்காக காட்சியளித்து அனைவரையும் வருக வருக என்று அழைப்பது போலிருப்பது அது ஒரு விலைமாதின் வீட்டின் வெளியே எரியும்போது.

ஓய். திலிப், பழனி

சீனாவில் புதுமை என்ன?

ஜனநாயகம் எட்டிப்பார்க்க முயற்சிக்கிறது.

நிர்மல் பதில்கள்

கோவிந்தன், மைலாப்பூர்.

மகிழ்ச்சி எப்போது ஆனந்தத்தைத் தரும்?

சந்தோஷம் வரும் போது (ஆளை விடுங்கள். எல்லாம் ஒன்று தானையா!)

கருமாரி பார்த்திபன், சேத்துப்பட்டு.

மக்கள் தர விரும்புவது பணத்தையா, பாசத்தையா?

பாசத்தைதான். அதுவும் பணம் இருப்பவர்கள் மேல் தான் பெரும்பாலும் காட்டப்படும்.

டி.ரமேஷ்ராஜ், பாண்டிச்சேரி.

மனிதனிடம் மானம் என்பது இல்லாவிட்டால்?

சமூகத்திலேயே மிக உயர்வான தொழிலாக விபச்சாரம் இருக்கும்.

வண்ணை கணேசன், சென்னை 11.

ஒரு நடிகை தமிழ் பண்பாட்டைப் பற்றி பேசுவது எப்போது?

வசனகர்த்தா எழுதிக் கொடுத்த வசனத்தை மனப்பாடம் செய்து காமிரா முன் ஒப்பிக்கும் போது.

ஜெயராமன், திருமழிசை.

வாழ்க்கையில வெற்றி பெற என்ன தேவை? இரண்டே வரியில் பதில் தேவை.

மற்றவர்களுடன் சற்று அனுசரித்துப் போய், பிறகு அவர்களை உங்களுடன் முழுக்க முழுக்க அனுசரித்துப் போக வைப்பது.

அயன்புரம் சிவாஜிபாபு, சென்னை.

அப்பாவி மக்களை ஏமாற்றுவது அரசியல்வாதிகளா? நடிகர்களா?

ஏமாறுவதுக்கென்றே கோடிக்கணக்கான அப்பாவி மக்கள் செல்வங்களைக் கொண்ட இந்த நாட்டில் அதற்கென்றே பிறந்திருக்கும் பல நடிக்கும் அரசியல்வாதிகளும், அரசியல் செய்யும் நடிகர்களும். ஏமாற்றுவதை போட்டி போட்டுக் கொண்டு செய்கிறார்கள்.

மைனர் முருகன், எட்டப்பாடி.

பெண்ணிற்கு சம உரிமை வழங்குபவன் யார்?

சம உரிமை வழங்குபவன் ஆண் என்றால் அதன் பொருள் அந்த உரிமையை ஆண்தான் வழங்க முடியும் என்றாகிறது. அந்த நிலையில் இல்லாதது ஒன்று உண்டு என்றால் அதுதான் சமஉரிமை. சமஉரிமையை பெண்ணே எடுத்துக் கொள்ளும் நிலை ஏற்படும் அன்றுதான் பெண் ஆணுக்குச் சமமான நிலையிலுள்ளாள் என்று ஏற்றுக் கொள்ளலாம்.

கலாவாணி, வேலூர்.

நல்ல மனைவியை எப்படி அடைவது?

ஒரு நல்ல தாயாரின் மகளைத் திருமணம் செய்து கொள்ளுங்கள்.

மா.திருநாவுக்கரசு, எண்ணூர்.

பள்ளி ஆசிரியர் ஏணி என்றால் டியூசன் ஆசிரியரை என்னவென்று அழைப்பது?

மாணவர்களை உயர்த்தி தான் மட்டும் உயராமல் அதே இடத்தில் இருக்கும் எந்த ஆசிரியருமே ஏணி தான். இந்தக் காலத்தில் டியூசன் ஆசிரியர்கள் தங்களைத் தாங்களே உயர்த்திக் கொள்வதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். இவர்களை எஸ்கலேட்டர்களுடன் வேண்டுமான்ல் ஒப்பிடலாம்.

தா.குமாரி, வாணியம்பாடி.

சிறியது என்றாலும் சக்தி வாய்ந்தது எது?

நான்கு அங்குல நீளமுள்ள நாக்கு. ஆற்றி உயர மனிதனை அதனால் தலைகுனிய வைக்க முடியும்.

தமிழரசு, திருமழிசை.

சமுதாயத்தில் தலைநிமிர்ந்து மனிதனாக கலபமான வழி?

தன்னடக்கத்தில் மற்றவர்களை விட சிறந்து விளங்குங்கள்.

சந்தானகிருஷ்ணன், திருநீர்மலை.

என்னைப் படிக்க உதவிய கடவுள் வேலை கிடைக்க உதவமாட்டேன் என்கிறாரே?

கடவுள் ஒவ்வொரு பறவைக்கும் உணவு தருகிறான். ஆனால், அவன் அதைப் பறவையின் கூடுக்குள் சென்று வைப்பதில்லை.

திருமாவளவன், நெற்குன்றம்.

நம்மை விட்டுச் சென்றால் திரும்பப் பெற முடியாதது எது?

பேசப்பட்ட வார்த்தைகள். அவசரப்பட்டு கொட்டப்பட்ட வார்த்தைகளை ஒன்றுசேர்த்து நூறு ரயில் என்ஜின்களில் கூட திரும்பக் கொண்டு வர முடியாது.

டி.எ.சரவணன், சந்தைப்பேட்டை.

வாழ்க்கையின் தத்துவம் என்ன?

சிறிது சிந்தனை, உயர்த்தும் உழைப்பு, ஆழ்ந்த உறக்கம். அளவிலா அன்பு.

ஜி.கே.எஸ்.மூர்த்தி, கோபிச்செட்டிபாளையம்.

நமது சேமிப்பை கரியாக்கும் வருடா வருடம் வரும் இந்த தீபாவளி தேவை தான்?

தேவையில்லைதான். ஆனால், வேகமாக வெடி மருந்தை வைத்துக் கட்டி, காகிதத்தால் சுருட்டி தங்கள் பிஞ்சு விரல்களை கரியாக்கி கரடு முரடாக்கி அதே நேரத்தில் தங்கள் கண்களில் ஈரம் வராமலும் வயிற்றின் மீது ஈரத்துணியை போட்டுக் கொள்ள வேண்டிய நிலையைத் தவிர்க்கவும். விடாது உழைக்கும் பல்லாயிரக்கணக்கான சிவகாசி சிறுவர் சிறுமியரை நினைக்கும் போது தீபாவளி தேவைதான் என்று நினைக்கத் தோன்றுகிறது. ஒவ்வொரு வெடி சத்தம் கேட்கும் போது ஒரு சோற்று பருக்கை ஒரு சிறுவனின் வயிற்றில் போவது தெரிகிறது.

நடராஜமூர்த்தி, கிழக்கு தாம்பரம்.

* பரிசு பெற்ற கேள்வி

கணவன் மனைவி எப்படி ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று வாழ்த்தும் போது, நகமும் சதையும் போல் எதுகையும் மோனையும் போல் இணை பிரியாதிருக்க வேண்டும் என்று கூறுகிறார்களே. இந்த காலத்திற்கேற்றவாறு ஒன்றைக் கூறமுடியுமா?

தமிழர்கள்தான் பேசிக் கொண்டே இருப்பதில் வல்லவர்களாயிற்றே. அதுவும் மேடையில் பேசுவது என்றால் கற்கண்டாயிற்றே! ஆகவே 'மைக்கும் ஸ்பீக்கரும் போல்' என்று கூறலாம். தூங்கியே தங்கள் வாழ்க்கையை பாழாக்கிக் கொள்வதால் ''தூக்கமும் கொட்டாவியும் போல்'' என்று வாழ்த்தலாம். டி.வி. பார்த்தே தம்பதிகளின் பொன்னான நேரம் பறந்து போய்க் கொண்டிருக்கிறது என்பதை வலியுறுத்த ''டி.வி.யும் ஆன்டனாவும் போல்'' வாழ வேண்டும் என்று வாழ்த்தலாம்.

எம்.பி.நிர்மல் பதிலளிக்கிறார்



எஸ்.தீபா, பூவிருந்தவல்லி

காதலியை ஏமாற்றும் காதலனுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?

கவலைப்படாதீர்கள். அவன் திருமணம் செய்து கொள்ளாமலா இருந்துவிடப் போகிறான்?

ஆர்.தாரா, அமைந்தகரை

பெண்களின் கண்களுக்கு மட்டும் கதை பேசும் சக்தியை ஆண்டவன் கொடுத்தது ஏன்?

அதைப் படிப்பதற்கு யாராவது வேண்டுமே! அதனால்தான் ஆண்களின் கண்களுக்கு கதை பேசும் சக்தியைக் கடவுள் தரவில்லை. மாறாக பெண்களின் கண்கள் பேசும் கதையைப் படிக்கும் சக்தியை ஆண்களின் கண்களுக்கு மட்டுமேதான் கடவுள் கொடுத்துள்ளார்.

வத்சலா, நாமக்கல்

நாகரீகத்தின் முடிவு?

நாகரீகம் ஒரு சுற்றும் சக்கரம். இன்றைய நாகரீகம் நேற்றைய அநாகரீகம். நேற்றைய அநாகரீகம் இன்றைய நாகரீகம்.

வி.வே.ஜெயந்தி, பி.ஏ., எர்ணாகுளம்

லைலா - மஜ்னு, ரோமியோ - ஜூலியட், சலீம் - அனார்கலி, அம்பிகாபதி - அமராவதி போன்ற காதலில் தோல்வியுற்றவர்களின் வாழ்க்கைதான் அமரத்துவம் பெற்றிருக்கிறதே தவிர, காதலில் வெற்றி பெற்றோர் வாழ்க்கை எதுவும் அத்தகைய புகழ் பெறாதது ஏன்?

தோல்வியால் மட்டும் அவர்கள் அமரத்துவம் பெறவில்லை. மக்களின் மனதில் நீங்கா இடம்பெறச் செய்தது கதாபாத்திரங்களின் தியாக உணர்வுதான்.

ஒய்.கோபு, வத்தலகுண்டு

வாழ்க்கை எனக்கு 'போர்' அடித்து விட்டது. துறவியாக எண்ணுகிறேன். இது சரிதானே?

பிறகு துறவறமும் 'போர்' அடித்தால் என்ன செய்வீர்கள்? வங்காள விரிகுடாவில் வீழ்வீர்களா? அதை முதலில் முடிவு செய்துகொண்டு இந்த முடிவை எடுங்கள்.

மந்தவெளியான், மந்தவெளி

பெண்மை நிரந்தரமாக மலர்வது எப்பொழுது?

ஆணின் முகத்தில் வழியும் அசட்டுத்தனத்திலிருந்து அதை அறிந்து கொள்ளலாமே.

யு.வாசுதேவன், சேலம்.

ரஜினிகாந்த் தி.மு.க.வைச் சேர்ந்தவரா?

ஆமாம். 'தி'ரைப்பட 'மு'ன்னணிக் 'க'தாநாயகர்களில் ஒருவர்.

எல்.ஆண்டாள், திருப்போரூர்.

அபூர்வ சகோதரர்கள் படத்தைப் பார்த்தீர்களா? கமல்ஹாசனுக்கு கால் குட்டையா? குட்டையா இருப்பவர்கள் நெட்டையாக முடியும். ஆனால் நெட்டையாக இருப்பவர்கள் குட்டையாக முடியுமா?

முடியும் என்று நிரூபித்ததனால்தான் படம் அந்தப் போடு போட்டது.

பிறந்த தேதிப்படி அறுபது. அவருடைய குரலின் வயது இருபது.

சுபாஷ்சந்திரன், தி.நகர்

பெண்களால் தனித்து வாழ முடியுமா?

முடியும். ஆனால், ஆண்களால் தனித்து வாழ முடியாது. அதனால் பெண் தனித்து வாழும் வாய்ப்பில்லை.

எம்.முருகன், பலவந்தாங்கல்.

சினிமா என்பது கலையா? வியாபாரமா?

வியாபாரமாக்கப்படும் கலை.

வி.கபில், செங்கல்பட்டு.

முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாயிருப்பது சினிமாவா? அரசியலா?

முதலாவது சினிமா கலந்த அரசியல் இரண்டாவது அரசியல் கலந்த சினிமா.

கோபாலகிருஷ்ணன், வடபழனி.

லதாமங்கேஷ்கரின் வயது என்ன?

சரவணன், மதுக்கூர்

பணம் வந்ததும் குணமிழந்து போவோர் பற்றி...

பாவம் அந்த திமிர் ஏழைகள்.

பி.குமரேசன், உப்பிலியாபுரம்.

தனக்காக பணம் என்ற செல்வத்தை உருவாக்கிக் கொள்ளும் மனிதன் சிறந்தவர்தானே?

தன்னைத் தானே உருவாக்கிக் கொள்பவன் வேறு; தனக்காக பணத்தை உருவாக்கிக் கொள்பவன் வேறு. முதலாமவனையே உலகம் பெரிதும் விரும்பும்.

ரமேஷ், மதுக்கூர்.

ஏழையின் சிரிப்பு, குழந்தையின் சிரிப்பு எதில் உண்மையான இறைவனைக் காண முடியும்?

மற்றவர்களின் சிரிப்புகள் இருக்கட்டும். உங்களுடைய முகத்தில் தோன்றுவது இதயத்தின் அடித்தளத்திருந்து வரும் கள்ளமில்லாச் சிரிப்பு என்றால், இறைவனை நீங்கள் காண எங்கும் தேட வேண்டிய அவசியமில்லை. இறைவன் உங்கள் இதயத்துக்கே குடிவந்துவிட்டான் என்ற முடிவிற்கு நீங்கள் வரலாம்.

பா.உதயகண்ணன், பெரம்பூர்.

நாட்டை வளப்படுத்த நாம் என்ன செய்ய வேண்டும்?

சுயநலத்துக்காக நாட்டு வளத்திற்கு குந்தகம் விளைவிப்பதை நிறுத்த வேண்டும்.

தா.செந்தில்குமார், வடக்காலத்தூர்.

பத்திரிகை ஆசிரியர், பள்ளி ஆசிரியர் இந்த இருவரில் யாருடைய பணி சிரமமானது?

பத்திரிகை ஆசிரியர் பணியில் ஓட்டை விழுந்தால் அவர் வெளியிடும் பத்திரிகை குப்பைத் தொட்டியில் விழும்.

பள்ளி ஆசிரியர் பணியில் விரிசல் கண்டால் அவரிடம் படிக்கும் மாணவனின் எதிர்காலம் குப்பைத் தொட்டியில் எறியப்படும். எவருடைய பணி முக்கியமானது சிரமானது என்பது இப்போது புரிகிறதா?

துரைமுருகன், தில்லைநகர்.

மற்றவர்களால் விரும்பப்படுபவன் ஒரு சிறந்த மனிதன்தானே?

ஆம். ஆனால் மற்றவர்களால் விரும்பப்படுபவனாக இருப்பதை விட அவர்களை விரும்புபவனாக இருக்கும் நிலையே சிறந்தது.

என்.சுரேஷ், சேலம்.

தூக்கம் வராமலிருக்க ஒரு சுலபமான வழி சொல்லுங்களேன்.

சுலபம். நன்றாகத் தூங்குங்கள், தேவையான அளவு.

பா.செந்தில்குமார், வடக்காலத்தூர்.

காதலில் தோல்வி அடையும் ஆண்கள் தாடி வளர்த்துக் கொள்வதேன்?

காதலை இனி வளர்க்க முடியாது என்ற நிலை ஏற்பட்டபின் சுலபமாக வளர்க்கக் கூடியது தாடி ஒன்றுதானே!

வண்ணை கணேசன், சென்னை-11

அரசியல்வாதியை எப்போது புரிந்து கொள்ளலாம். மக்களை எப்போது புரிந்து கொள்ளலாம்?

அரசியல்வாதியைத்தான் நமக்கு நன்றாகத் தெரியுமே. அதனால் புரிந்து கொள்வதில் பிரச்னை இல்லை. மக்களைக் கேட்கிறீர்களா? அவர்களை எப்போதுமே புரிந்து கொள்ள முடியாது நண்பரே!

நடிகர் - நடிகைக்கும் சரி, அரசியல் வாதிக்கும் சரி.. விளம்பரம் எத்தனை நாளைக்கு கை கொடுக்கும்?

அது விளம்பரந்தான் என்பதை மக்கள் புரிந்து கொள்ளும் வரையில்.

எம்.ஜி.முருகன், விருதுநகர்-1

நான் பி.எஸ்சி கம்ப்யூட்டர் இன்ஜினியரிங் படிக்கிறேன். படிப்புக்கு ஏற்ற வேலை கிடைக்குமா என்கிற பயம் மனதில் இருந்து கொண்டே இருக்கிறது. இதைப் போக்க ஒரு வழி சொல்லுங்களேன்?

பயத்தை துரத்தித் தள்ளுங்கள். படிப்புக்கேற்ற வேலை கிடைக்கவில்லை யென்றால் பொருத்தமான சுய வேலையைத் தேடிக் கொள்ள வேண்டியதுதான் நல்ல திட்டம். வங்கிக் கடன் உதவி, கடும் உழைப்பு ஆகியவைகளை உறுதி செய்து கொண்டு தன்னம்பிக்கை துணையுடன் சுயகால் பயணத்தைத் துவக்குங்கள்.

★ ஆர்.ராமு, திருநெல்வேலி.

பிறக்கும்போதும் அழுகின்றான்; இறக்கும்போதும் அழுகின்றான். உங்கள் விளக்கம் என்ன சார்?

இந்த பூமியில் பிறந்து விட்டோமே என்று பிறக்கும்போது அழுகிறான். தப்பித் தவறி திரும்ப பிறந்து விடுவோமோ என்று பயந்து இறக்கும்போதும் அழுகின்றான்.

ராமகிருஷ்ணன், கோயம்பேடு

நமது நாட்டில்தான் பெண்களை நாம் நன்றாக நடத்துகிறோம். சமமாக நடத்துகிறோம் என்கிறேன் நான்..?

எவ்வளவு பெரிய உண்மை...!

அலுவலகத்திலிருந்து கணவன் வருகிறான். சில நிமிடங்களில் மனைவியும் தன் அலுவலகத்திலிருந்து திரும்புகிறாள். சோபாவில் களைப்பாக சாய்ந்திருக்கும் கணவன், 'உம்... காபி ... சீக்கிரம்'' என்கிறான். ஓடுகிறாள் மனைவி அடுக்களைக்கு. காபி தயாரிக்கிறாள். பிறகு உணவு தயாரிக்கிறாள். உறுதியான உடலுடைய கணவன் அலுவலகத்தில் மட்டுமே வேலை செய்கிறான். மென்மையான மனைவியோ அலுவலகத்திலும் வேலை செய்கிறாள். பிறகு சமையலறையிலும் வேலை செய்கிறாள். போதுமா, நம் நாட்டில் ஆண் பெண் சமத்துவத்திற்கான நாம் காணும் உதாரணம்.

எம். முத்து உதயகுமரன், சென்னை-15

நமது தமிழக முதல்வரின் ஆங்கிலப் பேச்சை கேட்டதுண்டா?

அவர் பள்ளி மாணவியாய் இருந்த போதே பொழுதுபோக்கு பத்திரிகையாளன் என்ற முறையில் அவரது தாயார் சந்தியாவை பேட்டி காண சென்றபோதே இன்றைய முதல்வரை சந்தித்து பேசும் வாய்ப்பை பெற்றவன். சிறப்பாக ஆங்கிலத்தில் பேசுவதால் 'சாச பார்க் மானவிகள்' அனைவரும் திறமையுடையவர்கள். அதிலும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அப் பள்ளியில் முதல் மாணவியாகத் திகழ்ந்தவர். பிறகு ஆங்கில சொல்லாற்றலுக்கு கேட்க வேண்டுமா?

தேவிகாராணி, ராணிப்பேட்டை

நாம் யாரை மதிக்க வேண்டும்?

தன்னைத் தானே மதிக்கும் ஒவ்வொருவரையும் நாம் மதித்தே ஆகவேண்டும்.

கிருஷ்ணராஜகுமார், வேதாரண்யம்

நான் வெளிப்படையான ஆசாமி, யாரைப் பற்றி எது என் எண்ணத்தில் உதித்தாலும் பட்டென்று போட்டு உடைத்து விடுவேன். விளைவு எனக்கு இன்று நண்பர்களே இல்லை! உங்கள் அறிவுரை ப்ளீஸ்!

இதோ! அதற்கு ஒரு வழி. சிந்தனையில் தோன்றுபவைகளை ஒவ்வொன்றையும் உங்கள் மனதில் உண்டாகும் மனித இனத்தைச் சேர்ந்த உயிருள்ள ஒன்றாகக் கருதுங்கள். அந்த உயிருள்ளவற்றை நிர்வாணமாக வெளியே அனுப்பாதீர்கள். அவற்றிற்கு உடையணிவித்து தலைவாரி பொட்டிட்டு மற்றவர்களிடம் அனுப்புங்கள். விளைவு? இங்கிதம் தெரிந்த மனிதர் நீங்கள்தான் என்று அனைவரும் எப்போதும் உங்களை சூழ்ந்தே இருப்பார்கள்.

நிர்மல் பதில்கள்

★ பரிசு பெறும் கேள்வி

ரூ.10 பரிசு பெற்றவர்கள்

27.9.91 இதழ் சுசீலா கிருஷ்ணன், சேலம்.

4-10-91 இதழ் எம்.மல்லிகா, காட்பாடி.

பைந்தமிழன், கோவை 16

ஒருவன் முன்னேற எது தேவை?

அவன் முன்னேற தெரிந்து கொள்ள வேண்டியது. அவன் எங்கே இருக்கிறான் என்பதல்ல. எந்த திசையை நோக்கி போய்க் கொண்டி ருக்கிறான் என்பதே.

கோவிந்தன், மைலாப்பூர்.

மகிழ்ச்சி எப்போது ஆனந்தத்தைத் தரும்?

சந்தோஷம் வரும் போது (ஆளை விடுங்கள். எல்லாம் ஒன்று தானையா!)

கருமாரி பார்த்திபன், சேத்துப்பட்டு.

மக்கள் தர விரும்புவது பணத்தையா, பாசத்தையா?

பாசத்தைதான். அதுவும் பணம் இருப்பவர்கள் மேல் தான் பெரும்பா லும் காட்டப்படும்.

டி.கரேஷ்ராஜ், பாண்டிச்சேரி.

மனிதனிடம் மானம் என்பது இல்லா விட்டால்?

சமூகத்திலேயே மிக உயர்வான தொழிலாக விபச்சாரம் இருக்கும்.

வண்ணை கணேசன், சென்னை 11.

ஒரு நடிகை தமிழ் பண்பாட்டைப் பற்றி பேசுவது எப்போது?

வசனகர்த்தா எழுதிக் கொடுத்த வசனத்தை மனப்பாடம் செய்து காமிரா முன் ஒப்பிக்கும் போது.

ஜெயராமன், திருமழிசை.

வாழ்க்கையில் வெற்றி பெற என்ன தேவை? இரண்டே வரியில் பதில் தேவை.

மற்றவர்களுடன் சற்று அனுசரித் துப் போய், பிறகு அவர்களை உங்களுடன் முழுக்க முழுக்க அனுச ரித்துப் போக வைப்பது.

அயன்புரம் சிவாஜிபாபு, சென்னை.

அப்பாவி மக்களை ஏமாற்றுவது அரசியல்வாதிகளா? நடிகர்களா?

ஏமாறுவதுக்கென்றே கோடிக்கணக் கான அப்பாவி மக்கள் செல்வங்க ளைக் கொண்ட இந்த நாட்டில் அதற்கென்றே பிறந்திருக்கும் பல நடிக்கும் அரசியல்வாதிகளும், அரசி

நிர்மலி பதில்கள்

யல் செய்யும் நடிகர்களும். ஏமாற்று வதை போட்டி போட்டுக் கொண்டு செய்கிறார்கள்.

மைனர் முருகன், எடப்பாடி.

பெண்ணிற்கு சம உரிமை வழங்குப வன் யார்?

சம உரிமை வழங்குபவன் ஆண் என்றால் அதன் பொருள் அந்த உரிமையை ஆண்தான் வழங்க முடி யும் என்றாகிறது. அந்த நிலையில் இல்லாதது ஒன்று உண்டு என்றால் அதுதான் சமஉரிமை. சமஉரிமையை பெண்ணே எடுத்துக் கொள்ளும் நிலை ஏற்படும் அன்றுதான் பெண் ஆணுக்குச் சமமான நிலையிலுள் ளாள் என்று ஏற்றுக் கொள்ளலாம்.

கலாவாணி, வேலூர்.

நல்ல மனைவியை எப்படி அடை வது?

ஒரு நல்ல தாயாரின் மகளைத் திருமணம் செய்து கொள்ளுங்கள்.

மா.திருநாவுக்கரசு, எண்ணூர்.

பள்ளி ஆசிரியர் ஏணி என்றால் டியூசன் ஆசிரியரை என்னவென்று அழைப்பது?

மாணவர்களை உயர்த்தி தான் மட்டும் உயராமல் அதே இடத்தில் இருக்கும் எந்த ஆசிரியருமே ஏனி தான். இந்தக் காலத்தில் டியூசன் ஆசிரியர்கள் தங்களைத் தாங்களே உயர்த்திக் கொள்வதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். இவர் களை எஸ்கலேட்டர்களுடன் வேண்டு மானால் ஒப்பிடலாம்.

தா.குமாரி, வாணியம்பாடி.

சிறியது என்றாலும் சக்தி வாய்ந்தது எது?

நான்கு அங்குல நீளமுள்ள நாக்கு. ஆறடி உயர மனிதனை அதனால் தலைகுனிய வைக்க முடியும்.

தமிழரசு, திருமழிசை.

சமுதாயத்தில் தலைநிமிர்ந்து மனித னாக சுலபமான வழி?

தன்னடக்கத்தில் மற்றவர்களை விட சிறந்து விளங்குங்கள்.

சந்தானகிருஷ்ணன், திருநீர்மலை.

என்னைப் படிக்க உதவிய கடவுள் வேலை கிடைக்க உதவமாட்டேன் என்கிறாரே?

கடவுள் ஒவ்வொரு பறவைக்கும் உணவு தருகிறான். ஆனால், அவன் அதைப் பறவையின் கூடுக்குள் சென்று வைப்பதில்லை.

திருமாவளவன், நெற்குன்றம்.

நம்மை விட்டுச் சென்றால் திரும்பப் பெற முடியாதது எது?

பேசப்பட்ட வார்த்தைகள். அவச ரப்பட்டு கொட்டப்பட்ட வார்த்தை களை ஒன்றுசேர்த்து நூறு ரயில் என்ஜின்களில் கூட திரும்பக் கொண்டு வர முடியாது.

டி.எ.சரவணன், சந்தைப்பேட்டை.

வாழ்க்கையின் தத்துவம் என்ன?

சிறிது சிந்தனை, உயர்த்தும் உழைப்பு, ஆழ்ந்த உறக்கம். அள விலா அன்பு.

ஜி.கே.எஸ்.மூர்த்தி, கோபிச்செட்டிபா ளையம்.

நமது சேமிப்பை கரியாக்கும் வருடா வருடம் வரும் இந்த தீபாவளி தேவை தானா?

தேவையில்லைதான். ஆனால், வேகமாக வெடி மருந்தை வைத்துக் கட்டி, காகிதத்தால் சுருட்டி தங்கள் பிஞ்சு விரல்களை கரியாக்கி கரடு முரடாக்கி அதே நேரத்தில் தங்கள் கண்களில் ஈரம் வராமலும் வயிற்றின் மீது ஈரத்துணியை போட்டுக் கொள்ள வேண்டிய நிலையைத் தவிர்க்கவும். விடாது உழைக்கும் பல்லாயிரக்கணக்கான சிவகாசி சிறு வர் சிறுமியரை நினைக்கும் போது தீபாவளி தேவைதான் என்று நினைக் கத் தோன்றுகிறது. ஒவ்வொரு வெடி சத்தம் கேட்கும் போது ஒரு சோற்று பருக்கை ஒரு சிறுவனின் வயிற்றில் போவது தெரிகிறது.

நடராஜமூர்த்தி, கிழக்கு தாம்பரம்.

*** பரிசு பெற்ற கேள்வி**

கணவன் மனைவி எப்படி ஒற்றுமை யாக இருக்க வேண்டும் என்று வாழ்த் தும் போது, நகமும் சதையும் போல் எதுகையும் மோனையும் போல் இணை பிரியாதிருக்க வேண்டும் என்று கூறுகி றார்களே. இந்த காலத்திற்கேற்றவாறு ஒன்றைக் கூறமுடியுமா?

தமிழர்கள்தான் பேசிக் கொண்டே இருப்பதில் வல்லவர்களாயிற்றே, அதுவும் மேடையில் பேசுவது என் றால் கற்கண்டாயிற்றே! ஆகவே 'மைக்கும் ஸ்பீக்கரும் போல்' என்று கூறலாம். தூங்கியே தங்கள் வாழ்க் கையை பாழாக்கிக் கொள்வதால் ''தூக்கமும் கொட்டாவியும் போல்'' என்று வாழ்த்தலாம். டி.வி. பார்த்தே தம்பதிகளின் பொன்னான நேரம் பறந்து போய்க் கொண்டிருக்கிறது என்பதை வலியுறுத்த ''டி.வி.யும் ஆன்டனாவும் போல்'' வாழ வேண் டும் என்று வாழ்த்தலாம்.

நிர்மல் பதில்கள்

என்.சுரேஷ், சேலம் 5.

கே:அரசியலில் ஈடுபடாமல் சமூக சேவை செய்ய முடியுமா?

ப: முடியும். உதாரணம் கணக்கிலடங்கா. அன்னை தெரசாவிலிருந்து பலரைச் சொல்லலாம். ஆனால், எண்ணிக்கையில் இதை பல மடங்கு மிஞ்சி நிற்பவர்கள் சமூக சேவை கடுகளவும் செய்யாமல் அரசியலில் அலங்கார பவனி வரும் பல்லாயிரக்கணக்கான தொழில் அரசியல்வாதிகள்.

ஸ்ரீதரன்,
பல்லாவரம்.

கே: ஐயா! வங்கி மேலாளரே! தெருவுக்கு தெரு துடப்பம் தூக்கிச் சென்று சுத்தம் செய்யும் தாங்கள், வங்கியில் ஒருநாள் துப்புறவு செய்யும் பணியாளர் வராது போயின் அப் பணியினை செய்வீரா?

எந்தத் தொழிலும் ஏற்ற தாழ்வு ஏதுமில்லை. மனதில் தான் அது இருக்கிறது.

சு.சாமிநாதன், திருச்சி.

கே: இந்தியா எப்போது பொருளாதார துறையில் முன்னேற்றம் காணும்?

ப: சினிமா, அரசியல், மதம் இவைகளுக்கு மக்கள் தரும் முக்கியத்தில் . பத்தில் ஒரு பங்கு கவனத்தை ஆக்கபூர்வமான விஷயங்களில் செலுத்தினால் போதும். இந்தியா இன்னொரு ஜப்பானாகிவிடும்.

ரஜினி முருகன்,
கங்கைகொண்டான்.

கே: உங்கள் வளர்ச்சியில் யார் பங்கு பெரும் பான்மையான இடம் வகிக்கின்றது?

ப: நான் சென்ற பாதையில் தடைக்கற்களை வைத்த ஒரு சில ''நல்லவர்கள்'' அந்தத் தடைக்கல்லை ஏன் படிக்கல்லாக மாற்றக் கூடாது என்ற எண்ணம் என்னுள் ஏற்பட்டு அதனால் நான் முன்னேறக் காரணமாக இருந்தது. அவர்களின் ''பரந்த குணந்தானே'' தடைகற்களை படிக்கற்களாக மாற்ற வேண்டிய பணி உங்களுடையதுதான் என்பதை என்றும் மறந்து விடாதீர்கள்.

பி.ரமேஷ், அயன்புரம்.

நடிகைகளெல்லாம் பொதுஜனத் தொடர்பாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளார்கள். இவர்களுடைய பணி என்ன? நடிகைகளைப் பற்றி எல்லாமே நல்ல செய்திகளாக வரும்படி பார்த்துக் கொள்வதுதானே?

அவசியமில்லை. சுஹாசினி குடும்பப் பாங்கான நடிகை. டிஸ்கோ சாந்தியோ கவர்ச்சியைக் காட்டுவதை தன் மூலதனமாக கொண்டவர். முன்னவரின் பொதுஜனத் தொடர்பாளரின் கடமை சுஹாசினி பிரசுரமாக இருக்கும் ஒவ்வொரு புகைப்படத்திலும் குடும்பப் பாங்காக காட்சியளிக்கிறாரா என்பதை சரிபார்த்துக் கொள்வதே! இரண்டாம் மலரின் பொது ஜனத் தொடர்பாளரின் பணி டிஸ்கோ சாந்தி எல்லா படங்களிலும் படு கவர்ச்சியாக காட்சியளிக்கிறாரா என்பதை உறுதி செயது கொள்வதே! இதில் மாறுதலாக நடந்து விட்டால் இரண்டு நடிகைகளின் மார்கெட் அவுட். பொதுஜனத் தொடர்பாளரின் வேலையும் அவுட்.

வண்ணை கணேசன்,
சென்னை -11.

கே: பெண் விசுவரூபம் எடுத்து பார்த்த துண்டா?

ப: இல்லை. ஆனால், பெண்ணிடம் எசகுபிசகாகப் பேசி அசடு வழிந்து சிறிய மனிதர்களாக கூனிக் குறுகி நின்ற பலரைப் பார்த்திருக்கிறேன்.

எம்.ராமசாமி, பாண்டிச்சேரி

கே: நான் சட்டப் பரீட்சையில் பாசாகி வக்கீலாகக் கோர்ட்டுக்குச் செல்ல இருக்கிறேன் உங்கள் அறிவுரை ப்ளீஸ்?

ப: ஒரு சீனியர் வக்கீல் புதிதாக தம்மிடம் சேர்ந்து முதன் முதலாகக் கோர்ட்டுக்கு செல்லவிருந்த தன் ஜூனியருக்கு அறிவுரை வழங்கினார்.

''கவனமாக கேள். நீதிமன்றத்தில் வழக்காடும் போது. ''உண்மைகள் உன்பக்கம் இருக்குமானால். உண்மைகளை அடித்துப் பேசு. சட்டம் உன் பக்கம் இருக்குமானால் சட்டத்தை அடித்துப் பேசு. இரண்டுமே இல்லையென்றால் மேஜையை அடித்துப் பேசு''

சந்திரசுகுமார், அபிராமபுரம்.

கே: சுற்றுப்புற சூழ்நிலை பற்றி தினந்தோறும் நீங்கள் பேசிவருவதை அறிவேன். வயிற்றுப் பாடே பெருந்தின்டாட்டமாக இருக்கும் இந்நாளில், சுற்றுப்புற சூழ்நிலையை அழகாக வைத்துக் கொள்ள பணம் செலவிடுவது அவசியந்தானா?

ப: மிக மிக அவசியம். சுற்றுப்புற சூழ்நிலை பாதுகாக்கப்படாவிட்டால், சில நூற்றாண்டுகளில் இப்பூவுலகில் உயிரினமே இருக்காது. தேவைதான் என்பதற்கு இதோ ஒரு நிகழ்ச்சி

சீனாவில தோன்றிய மாபெரும் மதத்தலைவர் கன்பியுஷியஸ் கடையிலிருந்து அரிசியையும், மலர்களையும் வாங்கி வீடு திரும்பிக் கொண்டிருந்தார். அரிசியும், மலர்களும் எதற்கு என்று எதிரே வந்தவர் கேட்டதற்கு கன்பியுஷியஸ் கூறினார்.

''நான் வாழ்வதற்கு அரிசி. நான் எதற்காகவாவது வாழ வேண்டுமே அதற்கு மலர்கள்''

எஸ்.கே.எம். மோகன் - கழிச்சூர்,

கே.எம்.பி.நிர்மல் என்பதை நிர்மல் எம்.பி. என்று போட்டால் எப்படி இருக்கும்?

ப:இப்படி பதில் சொல்வது விட்டுவிட்டு பாராளுமன்றத்தில் கேள்விக் கேட்டுக் கொண்டிருப்பேன்.

முதல் புராண தொலைத்தொடர் இது

நரகாசுரன்

'நரகாசுரன்' தொலைக்காட்சித் தொடரை திரு.ஆர்.எஸ். மனோகர் அவர்களும், அவருடைய சகோதரர் மிரபல மலையாளத் திரைப்படத் தாயாரிப்பாளர் லேட் திரு.ஆர்.எஸ். ஸ்ரீனிவாஸன் அவர்களின் புதல்வர் திரு.எஸ். சிவப்பிரசாத் அவர்களும் இணைந்து தயாரிக்கிறார்கள்.

முன்னணி நட்சத்திரங்களான மம்முட்டி, மோகன்லால், ஜெயராம் மற்றும் பலரை வைத்து சிறந்த முறையில் தயாரித்துள்ளார். மற்றும் கொச்சின் ஹனீபா, கமல் போன்ற சிறந்த (மலையாள, தமிழ்) இயக்குனர்களை அறிமுகப்படுத்திய பெருமை திரு.சிவப்பிரசாத் அவர்களையே சாரும். அவர் இந்த நரகாசுரன் தொடரின் மூலம் முதன் முறையாக தொலைக்காட்சி தொடர் தயாரிப்பில் இறங்கியுள்ளார்.

ஆகஸ்டு 18ம் தேதி முதல் ஞாயிறு தோறும் காலை எட்டரை மணிக்கு ஒளிபரப்பப்படவிருக்கும் 'நரகாசுரன்' தொடரில் ஆர்.எஸ். மனோகர், (நரகாசுரன்) கே.ஆர். விஜயா (பூமாதேவி), மதுரை சேஷகோபாலன் (மகாவிஷ்ணு) யுவஸ்ரீ (காயத்ரி), கணேஷ் (கிருஷ்ணன்), மாஸ்டர் ஸ்ரீதர் (நாரதர்) ராகவேந்திரா (இந்திரன்), ஹெரான் ராமசாமி (சுக்ராச்சாரியார்) போன்ற பல நடச்சத்திரங்கள் நடித்துள்ளார்கள். ரஞ்சன் காமிராவைக் கையாண்டுள்ளார். ஜான்சன் இசை அமைத்துள்ளார்.

நிர்மல் பதில்கள்

வி.சுகுமார், வேடத்தாங்கல்.

செய்த தவறை ஒருவன் எப்பொழுது உணர்கிறான்?

அதே தவறை வேறு ஒருவன் செய்து, அதனால் தவறு செய்தவன் பாதிக்கப்படும்போது.

கடல், வானவெளி இவைகளைவிட விசாலமானது...?

ஏணி தோணியாக இருந்து தன்னிடம் பாடம் கற்கும் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு அயராது பாடுபடும் ஆசிரியரின் மனம்.

ம.குணசத்திரன், மதுரை.1

உங்களிடம் கேள்விகளைக் கேட்டுத் திணற அடிக்கப் போகிறேன். என்ன செய்யப் போகிறீர்கள்?

நீங்களோ கேள்வி கேட்டு என்னை மட்டும் திணறடிக்கப் போகிறீர்கள். நானோ பதிலளித்து படிப்பவர்கள் அனைவரையும் திணறடிக்கப் போகிறேன். **Who is great?**

பிசாசு இருப்பதை நீங்கள் நம்புகிறீர்களா?

பல மனிதர்களை அது பிடிக்கும்போது பார்த்திருக்கிறேன்.

எஸ்.சங்கரலிங்கம், சேலம்.

அமெரிக்காவில் நீக்ரோக்களும் பத்திரிகை நடத்துகிறார்கள் என்று என் நண்பர் சொல்லுகிறார். நான் இல்லை என்கிறேன். எது சரி?

நீக்ரோக்கள் இல்லாத துறை இல்லை என்பது உண்மை. என்றாலும் நீக்ரோக்கள் இல்லாத இசையோ நடனமோ, விளையாட்டுப் போட்டிகளோ ரொம்ப 'சப்'.

முருகன், அம்பத்தூர்

உலகை அன்பால் வெல்லலாமா? அறிவால் வெல்லலாமா?

அன்புடன் கூடிய அறிவால் மட்டுமே!

பி.மாதவன், பண்ருட்டி.

திறமைசாலிகள் பலரிருக்க புகழ் பெற்றவனையே புகழ்கிறார்களே! ஏன்?

புகழ் பெறுவதற்கும் திறமை வேண்டுமே!

மனசு, மனம், மனது இவைகளில் எது சரியான சொல்?

என் மனசை கொஞ்சம் மனது பண்ணி பதில் சொல்லேன் என்றேன். 'மனம்' என்று பதில் வந்தது.

இறந்த உயிரைப் பிழைக்க வைக்க முடியுமா?

முடியும். பதில் கூறுபவர் கோயபல்ஸ்.

எம்.காயத்ரி, மதுரை 2

வரதட்சணையை ஒழிக்கவே முடியாதா? மாமியார் கொடுமை மாறாதா?

மதுரை செல்லும் இரயில் வண்டி தாம்பரத்தில் நின்றது. ஒருவன் ஒரு கம்பார்ட்மென்டில் ஏற முயன்றான். முடியவில்லை. முடியிருந்த கதவை உள்ளே இருந்தவர்கள் திறக்க மறுத்துவிட்டார்

கள். உள்ளே அவ்வளவு கூட்டம். ஒரு வழியாக கெஞ்சிக் கூத்தாடி உள்ளே சென்று விடுகிறான் அந்தப் பயணி. அடுத்து செங்கல்பட்டு வருகிறது. அங்கே ஏகக் கூட்டம். பயணிகள் பலர் கதவைத் திறக்குமாறு கேட்கிறார்கள். 'உள்ளே இடமில்லை என்பது தெரியவில்லையா, எப்படி கதவைத் திறப்பது?'' இப்படி சீறுபவன் வேறு யாருமில்லை. தாம்பரத்தில் கஷ்டப்பட்டு ஏறினானே அவனேதான். ஒரு மருமகளாக மாமியாரிடம் கஷ்டப்பட்டவள் தான் மாமியாராகும் பொழுது தன் மருமகளிடம் கருணை காட்டுவாள் என்பது சிறிதும் நிச்சயமல்ல. ஆகவே வரதட்சணையை ஒழிப்பது என்பது கடினம்தான். மாமியார் கொடுமை நீடிக்கும்;

வி.கற்பகம், வேலூர்.

ஸ்டவ் வெடித்து நிறைய பெண்கள் இறக்கிறார்களே?

ஆம். ஆனால் நிறைய மருமகள்கள் தான் ஸ்டவ் வெடித்து இறக்கிறார்கள். மாமியார்கள் ஸ்டவ் வெடித்து இறந்ததாக செய்தி வருவதில்லை. இதுதான் கொஞ்சம் புரியாத புதிராக இருக்கிறது.

டி.சச்சிதானந்தம், தஞ்சை.

இப்பொழுது கவிச்சக்கரவர்த்தி கம்பர் உயிரோடிருந்தால்?

உன்னைத்தான்.... நித்தம்..... நித்தம்.. அக்கம்பக்கம் அடித்தேன்... வட்டம் வட்டம்.....''

''நான் ராஜா.... நீ கூஜா.... பண்ணு தாஜா....'' போன்ற பாடல்களை எழுதி சிறந்த கவிஞருக்கான பிலிம்பேர் ஆவார்டை வருடா வருடம் வாங்கிடுவார்.

வி.இந்திராதேவி, வீருதுநகர்.

கற்பனை என்பது என்ன?

''நான் கூறுவது நூற்றுக்கு நூறு உண்மை'' என்று ஆரம்பித்து ஒருவன் சொல்வது.

நாணம் என்பது என்ன?

1900க்கு முன் பிறந்த பெண்மணிகள் யாராவது உயிருடன் இருந்தால் அவர்களைப் போய் கேளுங்கள்.

கடவுளை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

நல்ல மனிதர்களின் செயல்களில் பார்க்கிறேன்.

பி.மணி, பல்லாவரம

எப்பொழுதும் எதற்கும் சிரித்துக் கொண்டே இருந்தால் என்ன?

எப்போதும் சிரித்துக் கொண்டிருந்தால்.... மற்றவர்களின் சிரிப்புக்குள்ளாகி விடுவீர்கள். ஆனால் நகைச்சுவை உணர்வை வளர்த்துக் கொள்வது நல்லது. நகைச்சுவை உணர்வு நண்பர்கள் பலரைத் தேடித்தரும். கோபத்தைக் குறைப்பதால் அது நீண்ட ஆயுளைத் தரும். ''எனக்கு நகைச்சுவை உணர்வு மட்டுமில்லாதிருந்தால் நான் என்றோ தற்கொலை செய்து கொண்டிருப்பேன்'' இப்படிக் கூறியவர் இத்தேசத்தின் தந்தை காந்தி.

ஆர்.பி.கேசவன், மைலாப்பூர்.

கேள்வி கேட்கப்படும்போது என்ன நினைப்பீர்கள்?

என்ன பதில் தருவது என்ற கேள்வி எழும்!

அட்டையில்: ஜோதி

இவரது மாமா பிரபல தயாரிப்பாளர் பாலாஜியாவார். சர்ச் பார்க் கான்வென்டில் படித்து ப்ளஸ்டு தேர்ச்சி பெற்றவர்.. பாவை சந்திரனின் - மூப்பது கோடி முகங்கள், தொலைக்காட்சித் தொடரில் நடித்துக் கொண்டிருக்கிறார். மம்முட்டியுடன் ஒரு மலையாளப் படத்தில் நடிக்கவிருக்கிறார்.

—தகவல் — வண்ணப்படம்: யோகா

நிர்மல் பக்கம்

Do you want to read his thought provoking answers to the readers' question ?

Please see the presentation number ????